# பத்திரிக்கை செய்தி

## அரசு நிதியை முறைகேடு செய்த வழக்கில் அப்போதைய கிராம நிர்வாக அலுவலருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுக்கா, கணிசப்பாக்கம் மற்றும் சித்திரைச்சாவடி கிராம மக்களுக்கு கொடுக்க வேண்டிய தானே புயல் நிவாரண நிதியில் முறைகேடு செய்ததாக கிராம நிர்வாக அலுவலரான திரு.சம்பத், என்பவர் மீது கடந்த 2014ம் ஆண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கடலூர் பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கு தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள், கடலூர் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்று 07.02.2025 திரு.சம்பத், முன்னாள் கிராம நிர்வாக அலுவலருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.